2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்
குடிதண்ணீர்ப் பற்றுக்குறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வி. கே. கோதண்ட ராமன் அவர்கள், "தமிழ்நாட்டில் பரவலாகப் பல பகுதிகளில் குடிதண்ணீர் கிடைக்காமல் பொதுமக்களும் கால்நடைகளும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளதைப்பற்றி விவாதிக்க" என்று ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பற்றிய கருத்தை அறிவிப்பதற்குத் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இதற்கு இப்போது நான் அனுமதி தர மறுக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் அவர்கள், "தமிழ்நாட்டின் தலை நகரமாகிய சென்னை மாநகரில் கடந்த சில மாதங்களாகக் குடி தண்ணீர் இல்லாமல் லட்சக் கணக்கான குடும்பங்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். கல்லூரி மாணவர் விடுதிகளிலும், மருத்துவ மனைகளிலும் தேவையான தண்ணீர் இல்லை. பயங்கரமாகப் பாதிக்கப்பட்டுள்ள எல்லாப் பகுதி மக்களுக்கும் உடனடி தண்ணீர் வழங்க வேண்டிய அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையைப் பற்றி விவாதிக்க" ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.

அவர்களுக்கும் துணை மானியக் கோரிக்கை விவாதத்தின் போது இதுபற்றிய கருத்தை அறிவிக்க வாய்ப்பு இருக்கும் காரணத்தால் இதற்கும் நான் அனுமதி தர மறுக்கிறேன்.

3. அறிவிப்பு.
மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, இப்பேரவையின் நடைமுறை விதி 6 (1)-க்கு இணங்க, இக் கூட்டத்தொடரில், மாற்றுத் தலைவர்களாக, திரு. ந. தருமலிங்கம், திரு. செஞ்சி வெ. முனுசாமி, திரு. ப. மகாதேவன், திரு. கரு. சீமைச்சாமி, திரு. சி. கோவிந்தராஜன், திரு. அ. லெ. சுப்பிரமணியம் ஆகியோரை நான் நியமித்துள்ளேன். முப. 10–000

அடுத்து, அரசினர் மசோதா . . . .

திரு. வி. கே. கோதண்டராமன் : தண்ணீர்ப் பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. துணை மானியக் கோரிக்கைகள் வரும்போது ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் பேசி விடப்போகிறீர்கள். நம் மாநிலத்தில் பல பகுதிகள் மிக மோசமான நிலையில் இருக்கின்றன. ஆகவே தயவுசெய்து . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தலைவர் தீர்ப்புக் கொடுத்து விட்டால் அதன் பிறகு உறுப்பினர்கள் அதன் மீது கருத்து தெரிவிப்பது முறையாகாது. வேண்டுமென்றால் வருகிற துணை